DEC 2016

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (ஏப்ரல்/மே 2016)

## PYS 3133 உள மெய்ப்பொருளியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

01.(அ) உடல் - உள பிரச்சினை தொடர்பாக டேகார்டின் கருத்துக்களை எடுத்துக்கூறி மதிப்பிடுக.

(13 புள்ளிகள்)

(ஆ) லைபினிட்ஸின் உடல் உளம் தொடர்பின் கருத்துக்களை எடுத்துக்கூறி அவற்றை விமர்சன ரீதியாக ஆராய்க.

(12 புள்ளிகள்)

02.(அ) “உடலின் பண்பே ஆத்மா” என்ற உலகாயதர்களின் கருத்தினை ஆராய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) பௌத்தத்தில் “மனம்” என்ற கருத்து ஆரம்ப காலந்தொடக்கம் பிற்காலம் வரை கொண்டிருக்கும் வளர்ச்சியினை எடுத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

03.(அ) “ஒருவரின் உணர்வு நிலையினை புறவயமாக விளக்குவதில் சிக்கல்கள் உள்ளன.” இக்கூற்றினை தோமஸ் நேகலின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) புதிர்வாதம் என்றால் என்ன? என்பதை விளக்கி, கொலின் மெகினின் (Colin Meginn) இன் “மூடப்பட்ட அறிகை நிலை” (Cognitive Closure) என்ற கருத்தினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(12 புள்ளிகள்

04.(அ) புலக்காட்சி தொடர்பான மெய்ப்பொருளியல் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுக.

(13 புள்ளிகள்)

(ஆ) கருத்து மெய்மை வாதம் (Idealism) மற்றும் தோற்றப்பாட்டு வாதம் (phenomenalism) ஆகிய வாதங்களை எடுத்து விளக்கி, இவற்றின் குறைபாடுகளை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

## பகுதி – II

05. உள மெய்ப்பொருளியலின் இயல்பினையும் பரப்பினையும் விரிவாக விளக்குக.

(25 புள்ளிகள்)

06. உடல் உள்ள பிரச்சினையின் அடிப்படையில் சாங்கியர்களின் "புருஷா" மற்றும் "பிரகிருதி" ஆகிய கருத்துக்களை விளக்கி அவற்றுக்கிடையிலான தொடர்பினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(25 புள்ளிகள்)

*****